සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

24122

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

දෙමළ I
தமிழ் I
Tamil I

72 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

அறிவுறுத்தல்கள் :

※ பகுதி I இல் உள்ள **இரு** வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

**1.** மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i) மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றாரலன்
யானறி குவெனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தல்நும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே.

(அ) இச்செய்யுட் பகுதியின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
(ஆ) இதில் பாரியின் வீரம் புலப்படுத்தப்படுமாற்றைத் தெளிவுறுத்துக.
(இ) இதில் பாரியின் கொடைச்சிறப்பு விளங்குமாற்றை எடுத்துக்காட்டுக.
(ஈ) கபிலருக்கும் பாரிக்கும் இடையில் நிலவிய நெருக்கமான உறவு இதில் வெளிப்படுமாற்றை விளக்குக.

(ii) அலையொடு தழுவிச் சூன்முதிர்ந் தெழுந்தே
யழகுற விளங்குமை மாரி
தலைமக வளிக்கத் தாய்மனைக் குற்ற
தனையள்போற் றரைமிசை யடுத்துக்
குலவிமெய் பதறிப் பயமிகுத் ததிர்ந்த
குரலொடு மின்னிவாய் வெருவித்
துலைவற வுறவாண் மகவளித் ததுபோற்
சொரிந்தது குளிர்ந்ததந் நிலமே.

(அ) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
(ஆ) மழை பொழிவதைப் புலவர் வர்ணிக்குமாற்றைத் தெளிவுபடுத்துக.
(இ) இச்செய்யுளில் கையாளப்பட்டுள்ள அணிகளை எடுத்துக்காட்டி, அவற்றின் சிறப்பினை ஆராய்க.

(24 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

kalvi.lk

2. 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

'ஆ' பகுதியிலுள்ள உரைப் பகுதியைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) மாடு மாடு என்று பல ஏசி,
திட்டிக் கொட்டித் துரத்தி விரட்டிச்
சாமம் வரைக்கும் சாறு பிழிந்து
சக்கை வாங்குவீர்கள் பொடியனை -
வீட்டு வேலைக்காரப் பொடியனை
'மாடுகள்' தங்கள் வாய் நுரை தள்ள
மூசி மூசிக் களைக்காவிட்டால்..........
உங்கள் வீட்டில் உலைகள் கொதிக்குமோ ?
பொடியனின் தமையனும் தாயும் தந்தையும்
மாமனும் மாமியும் மச்சான் காரனும்
உடம்பைப் பிழிய ஒருப்படா திருந்தால்..........
மலை முகடுகளில், தேயிலை வளருமோ ?
வங்கியில் எல்லாம் காசு புரளுமோ ?
ஐந்து நட்சத்திர ஃகோட்டலில் அமர்ந்து
நண்டைக் கடித்து விறண்டி சுவைத்தபின்
புகையினை ஊதும் இளைய மருமகள்
நோன்மதி நாட்களில், திலக்கா எனப்படும்
இளைஞரின் அருகில் இருந்து கொஞ்சவும்
கண் இமை செருகிக் கனவில் ஆழவும்
உச்சக் குரலில் ஓசை புறப்பட
எச்சில் வாயால் இராகம் இழுக்கவும்
மச்சில் வாழவும் வசதிகள் வாய்க்குமோ ?
மாடு மாடென ஏசுகிறீர்கள்
மாடும் கயிறுகள் அறுக்கும்
ஆடவர், மகளிர் அது செய்யாரோ ?

(i) இக்கவிதையின் பொருளைப் பொறுத்தவரை பின்வரும் மூன்று கூற்றுகளுள் எது மிகப் பொருத்தமானது என்பதைத் தெரிந்து, அது ஏன் மிகப் பொருத்தமானது என்பதை விளக்குக. இக்கவிதை :
   1. உழைப்பின் பெருமை பற்றிப் பேசுவது
   2. ஏழைகளின் உழைப்புச் சுரண்டப்படுவதற்கு எதிரானது
   3. பணக்காரரின் சொகுசான வாழ்க்கை பற்றியது

(ii) ஏழைகளின் உழைப்புக்கும் பணக்காரரின் சொகுசு வாழ்க்கைக்கும் இடையில் உள்ள தொடர்பை கவிஞர் எவ்வாறு வெளிப்படுத்துகிறார் ?

(iii) வேலைக்காரச் சிறுவனின் பிரதேச அடையாளம் இக்கவிதையில் வெளிப்படுமாற்றை விளக்குக.

(iv) 'மாடும் கயிறுகள் அறுக்கும்' என்ற தொடர் மூலம் கவிஞர் வெளிப்படுத்த விரும்பும் கருத்தைத் தெளிவுபடுத்துக.

**அல்லது**

(ஆ) எலி வளைகளாக இரு அறைகளைக் கொண்ட குடிசை, ஈயெறும்பு தானும் நுளையாதவாறு இறுகக் கட்டிய கிடுகுச் செத்தையையே சுவராகக் கொண்ட குடிசையின் கர்ப்பக் கிரகத்தினுள் பக்குவமடைந்த மகள். என்னதான் அவல வாழ்க்கை வாழ்ந்தாலும் பருவ பக்குவமடைந்த குமரைக் கட்டுக் காவலாகத்தானே வைத்திருக்க வேண்டும். மற்ற அறையில் முன்பக்கம் முழுமையாகவும் மற்றிரு பக்கமும் மேல் அரையளவுக்குள்ள காலதர் வழியே, வெளியே வெண்பஞ்சாகத் தூமிக்கும் பனித்திவலைகள் உள் நுழைந்து மயிர்க்கால்களைத் துளைப்பதில் நின்றும் பாதுகாப்புப் பெறுவதற்காய்ச் சாரனெனுங் கருப்பையுள் சிசுவாக முடங்கிக் கிடந்தனர் தந்தையும் தனையனும். வாழ்க்கை முழுக்க கும்பகர்ண வரம் நல்கி விட்டால் எவ்வளவு சௌகரியப்படும் என்பது போலிருந்தது அவர்கள் தோற்றம். பசியின் அழுங்குப்பிடியில் வெறி முற்றிவிட்ட புலியின் நகங்களாக மனத்தை வராண்டும் அவசரங்களையும், குசேலகாண்டப் பாராயணத்தையும் மறந்த நிம்மதியின் பேராட்சி அவர்களில்.

[பக். 3 ஐப் பார்க்க

kalvi.lk

ஒட்டுத் திண்ணையில் ஈரவிறகுகளோடு நடத்திய மடைப்பள்ளிப்போரை நிறுத்தி விட்டு, குப்பி விளக்குடன் நெருங்கி வந்தாள் ஹமீலா, அவன் மனைவி. மெத்தென்ற இளமை நலம் இல்லாவிட்டாலும் மதாளிப்புக் குறையாத கஞ்சமலர் ஒத்தணம் பெற்றது கரீமின் புயம். அங்குசத்தின் பிரயோகத்தில் அடங்கியிருக்கும் யானையாகக் கரீம் வாரிச்சுருட்டி எழுந்தான். மகனையும் எழுப்பினான். கரித்துணிக்கைகளை அசைபோட்டுப் பல்துலக்கி அவள் தயாராய் வைத்திருந்த வெந்நீரில் முகம் அலம்பினார்கள்.

(i) குமர்ப் பிள்ளைகள் பற்றிய சமூக மனப்பாங்கை ஆசிரியர் எவ்வாறு வெளிப்படுத்துகிறார் என்பதைத் தெளிவுபடுத்துக.

(ii) தந்தையும் மகனும் ஏழ்மையை மறந்து நிம்மதியான தூக்கத்தில் ஆழ்ந்திருப்பதை ஆசிரியர் சித்திரிப்பதில் வெளிப்படும் கற்பனைச் சிறப்பை விளக்குக.

(iii) கும்பகர்ண வரம், குசேலகாண்டப் பாராயணம், மடைப்பள்ளிப்போர், கஞ்சமலர் ஒத்தணம் ஆகிய தொடர்கள் மூலம் உணர்த்தப்படும் பொருளைத் தெளிவுபடுத்துக.

(iv) ஆசிரியரின் மொழிநடை பற்றிக் கருத்துரை வழங்குக.

*(16 புள்ளிகள்)*

## பகுதி II

**3.** (அ) **சொல்வன்மை** என்ற அதிகாரத்தை ஆதாரமாகக்கொண்டு, சொல்வன்மை என்பதன் மூலம் வள்ளுவர் எதனைக் கருதினார் என்பதைத் தெளிவுபடுத்துக.

(ஆ) சொல்லுதல் வல்லாரது சிறப்பினையும் அது மாட்டாரது இழிவினையும் அவர் உணர்த்துமாற்றை எடுத்துக் காட்டுக.

(இ) சொல்வன்மையின் முக்கியத்துவத்தினை வள்ளுவர் வலியுறுத்துமாற்றினைத் துலக்குக.

(ஈ) திருக்குறள் எழுந்த காலப்பின்னணியைச் சுருக்கமாக விளக்குக.

*(20 புள்ளிகள்)*

**4.** **கைகேயி சூழ்வினைப் படலத்தில்** கைகேயியை விட்டுக் கூனி நீங்கியது முதல், கைகேயி கேட்ட இருவரங்களால் துனுக்குற்ற தயரதன் நிலத்தில் வீழ்ந்தது வரையுள்ள பகுதியில்,

(அ) கைகேயி கிடந்த கோலம் வர்ணிக்கப்படுமாற்றினை எடுத்துக் காட்டுக.

(ஆ) தயரதனிடத்து வாசகர்களுக்கு எவ்வாறு பரிவு தோற்றுவிக்கப்படுகிறது என்பதைத் தெளிவுபடுத்துக.

(இ) கைகேயி வெறுக்கப்படத் தக்கவளாகச் சித்திரிக்கப்படுமாற்றைத் துலக்குக.

(ஈ) கைகேயியிடத்துத் தயரதன் கொண்ட அதீத காதல் வெளிப்படுமாற்றை ஆராய்க.

(உ) கையாளப்பட்டுள்ள தற்குறிப்பேற்ற அணிகள் மூன்றினை எடுத்துக்காட்டி விளக்குக.

*(20 புள்ளிகள்)*

**5.** **பைதிரம் நீங்கு படலத்தில்,** நடுச்சாமத்தில் யேசுபாலனோடு புனித மரியாளும் சூசையப்பரும் பெத்தலகேம் நகரைவிட்டு வெளியேறியமையைச் சித்திரிக்கும் பகுதியிலே,

(அ) யேசுபாலனின் மகிமைகளும்

(ஆ) அவரைப் பிரிந்த நாட்டுக்கு ஏற்பட்ட அவலங்களும்
சித்திரிக்கப்படுமாற்றையும்

(இ) உவமை, உருவக அணிகளைக் கையாள்வதில் வீரமாமுனிவரிடத்துக் காணப்படும் ஆற்றலையும் தெளிவுபடுத்துக.

*(20 புள்ளிகள்)*

**6.** ஏ.ஜே.கனகரத்னாவின் **'விண்மீன்களுக்குத் திரும்பி ஏகுதல்'** என்ற கட்டுரையில்,

(அ) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் 'விண்மீன்களிலிருந்து அறிவுபடைத்த உயிரினங்கள் இவ்வுலகிற்கு வருகை தந்தன' என்ற டானிக்கனின் வாதம் முற்றிலும் நகைப்புக்குரியதல்ல என்பதற்கு ஆசிரியர் கூறும் காரணங்களை எடுத்துக் காட்டுக.

(ஆ) பிற கோள்களிலிருந்து அறிவுபடைத்த உயிரினங்கள் பூமிக்கு வந்திருக்கின்றன என்ற தனது யூகத்தை நிரூபிக்க டானிக்கன் தரும் சான்றுகளை எடுத்துக் காட்டுக.

(இ) எதிர்காலத்தில் மனிதர்கள் கால-நேர எல்லைகளை மீறி விண்மீன்களுக்குப் பயணம் செய்வது சாத்தியம் என்பதை டானிக்கன் எந்த அடிப்படையில் நிறுவ முனைகிறார் ?

(ஈ) இக்கட்டுரையில் வெளிப்படும் 'அறிவியல் தமிழ் நடை'யின் முக்கியமான பண்புகள் சிலவற்றை எடுத்துக்காட்டி, விளக்குக.

*(20 புள்ளிகள்)*

[பக். 4 ஐப் பார்க்க

kalvi.lk

**7.** **சாப விமோசனம்** என்ற கதையில் பின்வரும் கூற்றுகள் ஒவ்வொன்றும்,

(i) இடம்பெறும் சந்தர்ப்பத்தை விளக்கி,

(ii) கதை ஓட்டத்தில் அதன் முக்கியத்துவம் பற்றிக் கருத்துரை வழங்குக.

(அ) "நெஞ்சினால் பிழை செய்யாதவளை நீ ஏற்றுக்கொள்ளுவது தான் பொருந்தும்."

(ஆ) "தெய்வமே ! சாபவிமோசனம் கண்டாலும் பாபவிமோசனம் கிடையாதா ?"

(இ) "சாம்பலை அகற்றுகிறவன் இரண்டொரு நாட்களில் வந்துவிடுவானே."

(ஈ) "மனிதருக்குக் கட்டுப்படாத தர்மம், மனித வம்சத்துக்குச் சத்துரு."

(உ) "அவன் கேட்டானா ?"

*(20 புள்ளிகள்)*

**8.** பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்கு** விடை எழுதுக.

(அ) "கருங்கால் வேம்பின்" எனத் தொடங்கும் **குறுந்தொகைச்** செய்யுளில் தலைவியின் பிரிவுத்துயர் புலப்படுத்தப்படுமாற்றை விளக்குக.

(ஆ) பெரியாழ்வாரின் **நீராட்டம்** பதிகத்தில் கண்ணனின் குறும்புகளும், கண்ணன் தீய சக்திகளை ஒறுத்தலும் தாயின் கூற்றுகள் மூலம் வெளிப்படுத்தப்படுமாற்றை விளக்குக.

(இ) தேசிக விநாயகம் பிள்ளையின் **சூரியகாந்தி** கவிதையில் வெளிப்படும் கற்பனைச் சிறப்பை விளக்குக.

(ஈ) பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் **விஞ்ஞானமும் அகராதியும்** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு சாமுவேல் கிறீன் ஆற்றிய பங்களிப்பினைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுக.

(உ) **நீண்ட பயணம்** நாவலில் 'சரஸ்வதி' என்ற பாத்திர உருவாக்கம் பற்றிக் கருத்துரை வழங்குக.

*(20 புள்ளிகள்)*

* * *

Education கல்வி අධ්‍යාපන

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

දෙමළ II
தமிழ் II
Tamil II

72 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இல் உள்ள **மூன்று** வினாக்களையும், பகுதி II இன் **'அ'** பிரிவிலிருந்து ஒரு வினாவையும் **'ஆ'** பிரிவிலிருந்து ஒரு வினாவையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

※ முதலாம் வினாவின் **'அ'** பகுதியிலுள்ள **இருபது** வினாக்களும் **தனியாகத்** தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி அதனை உமது ஏனைய விடைத்தாள்களின் மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

சுட்டெண் : ...........................

## பகுதி I

**1.** (அ) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே **ஐந்து** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.

1.1 முதல் எழுத்து என்பது
(1) சொல்லுக்கு முதலில் வரும் எழுத்து (2) உயிர் எழுத்து
(3) உயிர்மெய் எழுத்து (4) மெய் எழுத்து
(5) உயிர்ரெழுத்தும் மெய்யெழுத்தும் (......)

1.2 பின்வருவனவற்றுள் நுனிநா நடு அண்ணத்தைத் தொட உச்சரிக்கப்படும் எழுத்து
(1) ன (2) ர (3) ஞ (4) ண (5) ங (......)

1.3 பின்வருவனவற்றுள் உடன்நிலை மெய்மயக்கம் இடம்பெற்றுள்ள சொல்
(1) பற்கள் (2) அப்பம் (3) வெட்கம் (4) வாய்க்கால் (5) நட்பு (......)

1.4 பின்வருவனவற்றுள் பகுதி விகாரப்பட்டுப் புணர்ந்த சொல்
(1) செய்தேன் (2) இருந்தேன் (3) வந்தேன் (4) நடந்தேன் (5) கிடந்தேன் (......)

1.5 பின்வருவனவற்றுள் வேற்றுமை உருபு ஏற்கும்போது வடிவம் திரிபடையும் சொல்
(1) நீ (2) அவன் (3) மரம் (4) பல (5) கண் (......)

1.6 ஒரு பகுபதத்தின் பகுதி என்பது
(1) பகுபதத்தின் முதலில் வரும் உறுப்பு
(2) விகுதி ஏற்கும் சொல்
(3) விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி போன்றவற்றை ஏற்கும் அடிச்சொல்
(4) ஒரு பகுபதத்தில் இடம்பெறும் பகாப்பதம்
(5) வேற்றுமை உருபு ஏற்கும் வடிவம் (......)

1.7 உ. வே. சாமிநாதையர் அவர்கள் தமிழுக்குப் பெருந் தொண்டாற்றியுள்ளார். இவ்வாக்கியத்தில் வரும் 'அவர்கள்' என்பது
(1) பலர்பால் பெயர் (2) படர்க்கைப் பெயர்
(3) ஒருமைப் பெயர் (4) மரியாதைப் பன்மைப் பெயர்
(5) மரியாதை ஒருமைப் பெயர் (......)

1.8 பத்து மாம்பழங்கள் வாங்கினேன். அவற்றுள் இரண்டு அழுகி இருந்தன. இவ்வாக்கியத்தில் வரும் 'இரண்டு' என்பது
(1) எண்ணுப் பெயர் (2) மாற்றுப் பெயர் (3) எண் அடை
(4) அளவுப் பெயர் (5) பெயரடை (......)

[பக். 2 ஐப் பார்க்க

kalvi.lk

1.9 பின்வருவனவற்றுள் எதிர்மறைத் தொழிற் பெயர்களைக் கொண்ட தொகுதி
(1) வராதவன், போகாதவன் (2) வராதே, போகாதே
(3) வராதது, போகாதது (4) வராத, போகாத
(5) வராது, போகாது (......)

1.10 விண்வெளி, விண்கலம், சடப்பொருள் என்பன
(1) வேற்றுமைத் தொகை (2) பண்புத் தொகை (3) வினைத் தொகை
(4) காரணப் பெயர் (5) கூட்டுப் பெயர் (......)

1.11 பெருமழை பெய்ததால் பயிர்கள் நாசமடைந்தன. இவ்வாக்கியத்தில் வரும் 'ஆல்' உருபு உணர்த்துவது
(1) கருத்தாப் பொருள் (2) கருவிப் பொருள் (3) நிபந்தனைப் பொருள்
(4) காரணப் பொருள் (5) அழுத்தப் பொருள் (......)

1.12 பின்வருவனவற்றுள் இறந்தகாலம் காட்ட 'இன்' இடைநிலை ஏற்கும் வினைச் சொல்
(1) படி (2) போ (3) செல் (4) இரு (5) எழுது
(......)

1.13 உங்கள் வாழ்வில் துன்பம் நீங்கி இன்பம் மலரட்டும். இவ்வாக்கியத்தில் வரும் 'அட்டும்' என்பது
(1) ஏவல் வினை விகுதி (2) மரியாதை ஏவல் விகுதி (3) ஓர் அசைச் சொல்
(4) வியங்கோள் விகுதி (5) எதிர்மறை விகுதி (......)

1.14 அடிக்கடி, இடைக்கிடை, எப்போதாவது என்பன
(1) வினை எச்சம் (2) வினையடை (3) பெயரடை
(4) பெயரெச்சம் (5) இடைச்சொல் (......)

1.15 எல்லோரும் எங்கே போய்த் தொலைந்தார்கள் ?. இவ்வாக்கியத்தில் 'தொலை' என்பது
(1) துணை வினை (2) முதல் வினை (3) ஏவல் வினை
(4) தெரிநிலை வினை (5) தனி வினை (......)

1.16 அம்மா மீன் வாங்கச் சந்தைக்குப் போனார். அமைப்பு அடிப்படையில் இது ஒரு
(1) தனி வாக்கியம் (2) கூட்டு வாக்கியம்
(3) கலப்பு வாக்கியம் (4) எச்ச வாக்கியத் தொடர்
(5) கூற்று வாக்கியம் (......)

1.17 பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இவ்வாக்கியத்தில் 'பல்கலைக்கழகம் செல்ல வேண்டும்' என்பது
(1) பெயரெச்சத் தொடர் (2) நிபந்தனை எச்சத் தொடர்
(3) வினையடைத் தொடர் (4) தலைமைத் தொடர்
(5) நிரப்பித் தொடர் (......)

1.18 பின்வருவனவற்றுள் வழு வாக்கியம்
(1) அவர் இரண்டு பிள்ளைகளின் தகப்பன்.
(2) அவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள்.
(3) அவருக்குப் பிள்ளைகள் இருவர் உள்ளனர்.
(4) அவரிடம் இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள்.
(5) அவருக்குப் பிள்ளைகள் இல்லை. (......)

1.19 எங்கள் பாடசாலை அடுத்த ஆண்டு பொன்விழாக் கொண்டாடுகின்றது. இங்கு பொன்விழா என்பது எத்தனை ஆண்டுகள் நிறைவில் கொண்டாடப்படுவது ?
(1) 100 ஆண்டுகள் (2) 75 ஆண்டுகள் (3) 60 ஆண்டுகள்
(4) 50 ஆண்டுகள் (5) 25 ஆண்டுகள் (......)

1.20 "பாட்டி வெயில்லே வந்திருக்கா... சித்தே நகந்துக்கோ... வந்ததும் மேலே ஏறிண்டு..." இது
(1) யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழ்
(2) பிராமணர் பேச்சுத் தமிழ்
(3) சென்னைப் பேச்சுத் தமிழ்
(4) மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ்
(5) மலையகப் பேச்சுத் தமிழ் (......)

*(20 புள்ளிகள்)*

※※

[பக். 3 ஐப் பார்க்க

kalvi.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

දෙමළ II
தமிழ் II
Tamil II

72 T II

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இல் உள்ள 1 **ஆம்** வினாவின் **'ஆ'** பிரிவுக்கும், 2 **ஆம்**, 3 **ஆம்** வினாக்களுக்கும்

※ பகுதி II **'அ'** பிரிவிலிருந்து ஒரு வினாவுக்கும், **'ஆ'** பிரிவிலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**1.** (ஆ) பின்வரும் **ஐந்து** வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

1. சாரியை என்றால் என்ன ? உதாரணம் தந்து விளக்குக.
2. ஆக்கப்பெயர் பற்றிச் சுருக்கமாக விளக்குக.
3. தெரிநிலை வினையின் அமைப்பை உதாரணம் தந்து விளக்குக.
4. இறந்தகால, நிகழ்காலப் பெயரெச்சங்களின் அமைப்பை உதாரணம் தந்து விளக்குக.
5. வாக்கிய இணைப்பில் 'சமனிலையாக்கம்' பற்றிச் சுருக்கமாக விளக்குக.

*(10 புள்ளிகள்)*

**2.** (அ) பின்வரும் உரைப்பகுதியின் சாராம்சத்தை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

அசோகர் பௌத்தரை மட்டும் நேசித்து மற்றவரைத் துன்புறுத்தினாரில்லை. அவர் பௌத்தரையும் குடிமக்களாகவே கருதினர்; மற்றவரையுங் குடிமக்களாகவே கருதினர்; இருவருக்கும் ஒரே நீதி வழங்கினர். அக்பரும் முஸ்லிம்களையும் மற்றவரையும் குடிமக்களாகவே கருதி எல்லோருக்கும் ஒரே நியாயம் வழங்கினர். இருவர் அரசும் உலகிற்கு எடுத்துக்காட்டுகளாக நிற்கும் மாண்பு வாய்ந்தன...

அக்பர் ஆட்சிமுறை திறமை வாய்ந்ததாகவே இருந்தது. அதன்கண் அன்பும் நீதியும் விரவியே நின்றன. நல்லமைச்சும் வீரப் படைத்தலைமையும் அக்பர் ஆட்சிக்குத் தூண்களாக நின்றன. அவர்தம் ஆட்சியில் அரசுக்குரிய அங்கங்களெல்லாம் ஒழுங்குபட அமைந்திருந்தன. அவ்வமைப்புகளின் வகைகளை ஈண்டு விரித்துக் கூறவேண்டுவதில்லை. அக்பர் ஆட்சியில் கோலப்பெற்ற சீர்திருத்த முறைகளே பெரிதும் கருதற்பாலன.

அக்பர் முஸ்லிம். அவர் ஆண்ட நாடோ ஹிந்துக்களாலும் முஸ்லிம்களாலும் ஆக்கப்பட்டது. ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பலதிற வேற்றுமைகளுண்டு. அவ்விருவர்க்குள் ஒற்றுமை காண்டல் அருமையினும் அருமை என்று சொல்லப்படுவது வழக்கம். அருமையினும் அருமையை அக்பர் எளிமையினும் எளிமையாக்கினர். அரசர் மனம் ஒரு பக்கம் சாராது நேரிய நடுமையில் நின்றால் அருமைகளெல்லாம் எளியனவாகும். வேற்றுமை ஒற்றுமை என்பன மனதிலிருப்பன. மனதில் வேற்றுமை விளைந்தால் உலகிலும் வேற்றுமை விளையும். அதில் ஒற்றுமை நிலவினால் உலகிலும் ஒற்றுமை நிலவும்.

அக்பர் முஸ்லிம் வயிற்றில் பிறக்க நேர்ந்தமையால், அவர் ஹிந்துக்களை அடக்கவோ தம் கொள்கையில் ஈர்க்கவோ முயன்றிருத்தல் வேண்டுமோ ? அது மூர்க்கர் செயலாகும். அக்பர் அறிஞர்; அன்பர்; பரந்த நோக்குடையவர். அவருக்கு ஹிந்துக்களும் நாட்டவராகவே காணப்பட்டனர்; முஸ்லிம்களும் நாட்டவராகவே காணப்பட்டனர். இருவரிடத்திலும் அவருக்கு வேற்றுமை தோன்றவில்லை.

அக்பர் அரசாங்கத்திலும் சேனையிலும் பிறவற்றிலும் ஹிந்துக்களையும் அமர்த்தினர் ; முஸ்லிம்களையும் அமர்த்தினர். அவர் ஹிந்து என்றோ முஸ்லிம் என்றோ கருதி எவரையும் வேலையில் அமர்த்துவதில்லை. அவர்தம் மனம் எல்லாரையும் மனிதரென்றே கருதிற்று. அக்பர் மனம் வேற்றுமையில் நில்லாமையால் குடிமக்கள் மனமும் வேற்றுமையில் நிற்கவில்லை. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை அக்பர் ஆட்சியில் உரம் பெற்றே நின்றது.

*(10 புள்ளிகள்)*

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

இக்களப்பிரர் யாவர் ? எக்குலத்தார் ? என்பது பற்றிச் சரித்திர ஆசிரியர்களுக்குள் முடிவான கருத்து ஏற்படவில்லை. இதுபற்றிக் கோபிநாத ராயர் அவர்கள் எழுதுவதாவது:— "பெரும் பிடுகு முத்தரையன் என்ற சுவரன் மாறன் நந்திவர்ம பல்லவ மன்னனைத் தன் அரசனாகக் காஞ்சியில் வரவேற்றான் என்பது அந்நகரத்து வைகுண்டப் பெருமாள் கோவிலுள் காணப்படும் சிதைந்த சாசனம் ஒன்றிலிருந்து தெரியவருகின்றது. சுவரன் மாறனுக்கு கள்வர் தலைவனெனப் பொருள்படும் 'கள்வர கள்வன்' என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. இப் பெயர் கொண்டு இதுவே வடமொழியில் 'களப்பிரன்' என்று திரிந்திருக்கலாம். எனவே 'களப்பிரர்' என்பார் கள்வர் தலைவராகிய 'முத்தரையர்' என்னும் மரபினராவர் என்பதுதகும்." டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்காரும் இதே கருத்தைக் கொள்வாராயினர்.

[பக். 4 ஐப் பார்க்க

kalvi.lk

இனி, இலக்கிய வாயிலாய் இதனை ஆராய்வோமானால் களப்பிரர் என்பார் கள்வராகிய முத்தரையரின் முற்றும் வேறானவர் என்னும் உண்மை புலப்படும். இம் முத்தரையர் பல்லவர்கீழ்ச் சிற்றரசர்களாய் ஆட்சிபுரிந்து வந்தவர் என்பது செந்தலைச் சாசனத்தினின்று தெரியலாம். நந்திவர்ம பல்லவ மல்லனது முடிசூட்டு நாளில் முத்தரையன் ஒருவன் வந்து வரவேற்று வணங்கி நின்றனன் என்பது காஞ்சிபுரத்து வைகுண்டப் பெருமாள் கோயிற் சாசனமொன்றால் தெரியலாம். இதனால் பல்லவர்களும் முத்தரையர்களும் பழமையாகவே நட்பினராயிருந்தவரென்பது பெறப்படும். இந்நட்புரிமை பிற்காலத்தும் நிகழ்ந்து வந்ததே. நந்திவர்ம பல்லவ மல்லனது கொற்றமங்கலச் செப்பேடு களப்பிரரைப் பல்லவரது பகைவர் வரிசையில் வைத்துக் கூறுகின்றது. எனவே களப்பிரர் முத்தரையரின் வேறுபட்டவரென்பது தெளியலாம். வேள்விகுடிச் செப்பேட்டுள்ளும் களப்பிரரென்றே கூறப்பட்டுள்ளது. சிலர் கருத்தின்படி கள்வர் என்பது களப்பிரர் என வடமொழியில் மாறியதாயிருப்பின் தமிழ்ச் சாசனங்களாவது 'கள்வர்' எனச் சொந்தமான மூலப்பெயரை எடுத்தாளவேண்டுமன்றோ ? இங்ஙனம் கூறாமல் அதன் வடமொழித் திரிபான பெயரை எடுத்தாளுமோ ? தமிழ்ச் செய்யுள் இயற்றிய புலவர்களும் இவ்வாறு திரிந்த வடமொழி வழக்கைக் கையாண்டுள்ளார். கள்வர் என்னும் பதத்தை அவர்கள் இழிவாகக் கருதி வழங்காது விட்டனர் எனக் கூற இயலாது. ஏனெனில் சங்கச் செய்யுளான புறப்பாட்டொன்றில் 'புல்லி' என்ற தலைவனைக் 'கள்வர் கோமான்' என்று விதந்து கூறுதலாலென்க. இவற்றால் களப்பிரர் என்பார் முத்தரையரின் வேறான தனிக்குலத்தவர் என்பதி லையுற விடமில்லை.

(i) "களப்பிரர் என்பார் கள்வர் தலைவராகிய 'முத்தரையர்' என்னும் மரபினராவர்" என்ற கருத்து எந்த யூகத்தின் அடிப்படையில் முன்வைக்கப்படுகிறது ?

(ii) "களப்பிரர் முத்தரையரின் வேறுபட்டவர்" என்று கூறப்படுவதற்கான காரணங்கள் யாவை ?

(iii) களப்பிரர் என்பது கள்வர் என்ற தமிழ்ச் சொல்லின் வடமொழித் திரிபு அல்ல என்பதை நிறுவுவதற்கு முன்வைக்கப்படும் வாதங்கள் யாவை ?

(iv) தமிழ்ப் புலவர்கள் 'கள்வர்' என்ற சொல்லை இழிவானதாகக் கருதினரா ? விளக்குக.

*(10 புள்ளிகள்)*

**3.** பின்வருவனவற்றுள் யாதேனும் **ஒரு** தலைப்பைத் தெரிந்து **300 - 350** சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) கருத்துச் சுதந்திரமும் ஊடகங்களும்

(ஆ) பெண்களுக்கு எதிரான வன்முறை

(இ) பேராசிரியர் ம. மு. உவைஸ் அவர்களும் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்வுகளும்

(ஈ) வாசிப்புப் பழக்கத்தை வளர்த்தல்

(உ) தோல்வியிற் கலங்கேல்

*(20 புள்ளிகள்)*

## பகுதி II

### பிரிவு 'அ'

**4.** (அ) சங்ககாலத்தில் எழுந்த ஆற்றுப்படை நூல்களைக் குறிப்பிட்டு, ஆற்றுப்படை பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(ஆ) அகத்திணைப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பவற்றைத் தெளிவுபடுத்துக.

(இ) புறத்திணை மரபின் பிரதான அம்சங்களைச் சுருக்கமாக விளக்குக. *(15 புள்ளிகள்)*

**5.** (அ) சங்கமருவிய காலத்தில் தோன்றிய நூல்களை வகைப்படுத்திக் காட்டுக.

(ஆ) சங்கமருவிய காலத்தில் அறநூல்கள் அதிகம் தோன்றியமைக்கான சமூக, அரசியல் காரணிகளை விளக்குக.

(இ) சங்கமருவிய காலம் பக்தி இலக்கியத்தின் தோற்றகாலமாக அமையுமாற்றைத் தெளிவுபடுத்துக.

*(15 புள்ளிகள்)*

**6.** (அ) 19ஆம் நூற்றாண்டில் நவீன தமிழ் உரைநடை வளர்ச்சியடைவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகளைத் தெளிவுபடுத்துக.

(ஆ) ஆரம்பகாலத் தமிழ் நாவல்கள் பற்றிக் கருத்துரை வழங்குக.

(இ) தற்காலத் தமிழ் நாவல் வளர்ச்சியில் கல்கி **அல்லது** ஜெயகாந்தன் பெறும் இடத்தினை மதிப்பிடுக.

*(15 புள்ளிகள்)*

### பிரிவு 'ஆ'

**7.** (அ) ஐரோப்பியர் வருகைக்கு முந்திய, இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(ஆ) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் கிறிஸ்தவர்களின் பங்களிப்புப் பற்றி விளக்குக.

(இ) பழந்தமிழ் இலக்கியப் பதிப்பு முயற்சியில் ஈழத்தவரின் பங்கு குறித்துக் கருத்துரை வழங்குக.

*(15 புள்ளிகள்)*

**8.** (அ) இலங்கையில் தமிழ்ச் சிறுகதையின் தோற்றத்துக்குச் சாதகமாக அமைந்த காரணிகளை விளக்குக.

(ஆ) ஆரம்பகால ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையாசிரியர்களாகக் கொள்ளப்படுவோர் யாவர் ? அவர்களின் சிறுகதைகளில் காணப்படும் முக்கிய பண்புகள் யாவை ?

(இ) இலங்கைத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் டொமினிக் ஜீவா பெறும் முக்கியத்துவத்தைப் பரிசீலிக்குக.

*(15 புள்ளிகள்)*

* * *

kalvi.lk

### எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page